# IDARC TIMES

உரக்கச் சொல்வோம் உலகம் முழுக்க ஓம் ஸ்ரீ ராகவேந்த்ராய நமஹ!

இதழ் 4 நவம்பர் 2022



## கொங்கு மந்த்ராலயம்

அருள்மிகு கர்மயோகி ஸ்ரீ ராகவேந்திரர் பிருந்தாவனம்,
தொப்பம்பட்டி, கரூர் மாவட்டம்.

# IDARC TIMES

இதழ் 4 நவம்பர் 2022



*IDARC TIMES - Team*

**Founder & Publisher**
Muniandi K suppiah

**Editor - in- Cheif**
DMAG Saravanan

**Managing Editor**
D.Sakthivel

**Sub Editor & Designing**
R.Chandrasekaran

**Executive Editor**
Sathsangam Srinivasadasar

**Magazine Secretary**
Lakshmi Narayanan

**Editorial Team Executives**
Sivatha Thanigaivel
Ravi Ramasamy
Vijaya Kamaraj

**Advertising Sales Director**
Lakshmi Parthasarathy

**Sales Promotion Director**
Guru Murugan

**Regional Promotion Director**
Rama.Adhimoolam


## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பகுதி | 3 |
| News @ மந்த்ராலயம் | 4 |
| தாஸர் பக்கம் | 5 |
| ஆன்மிக அருவி | 6 |
| மாதம் ஒரு பிருந்தாவனம் | 7 |
| IDARC News | 9 |
| IDARC சமூக சேவைகள் | 10 |
| Malaysia மந்த்ராலயம் | 11 |
| ராயருக்கோர் கவிமாலை | 13 |
| குருராஜரின் மகிமை | 14 |



ஒன்றிணைவோம்!... உரக்கச் சொல்வோம்!... ஓம் ஸ்ரீ ராகவேந்திராய நமஹ!

ஸ்ரீ ராகவேந்திரரின் பக்தர்களை ஒன்றிணைத்து. குருசேவையில் முழு அர்ப்பணிப்புடன் அகில உலக ஸ்ரீ ராகவேந்திரர் பக்தி இயக்கம் (IDARC) செயல்பட்டு வருகிறது.

அகில உலக ஸ்ரீ ராகவேந்திரர் பக்தி இயக்கத்தில் இன்றே இணைந்திடுவீர்!

தொடர்புக்கு

திருமதி லட்சுமி பார்த்தசாரதி (மந்த்ராலய மாமி) - 9985914714
(நிர்வாக ஒருங்கிணைப்பாளர் - IDARC தமிழ்நாடு)

திரு.ரகுபதி - 98941 55866
(HOC - IDARC Members)



**Published by**
Munidandi K Suppiah
on behalf of Interneational Divine Association of Raghavendrar ConscIouness (IDARC).

**Founder & Publisher**
Muniandi K Suppiah
**Editor-in-Chief**
DMAG Saravanan
**Email** : Idarctimes@gmail.com.
**Mobile** : 6380066966.



தொடர்புக்கு

idarctimes@gmail.com

6380066966
9941699664


விமர்சனங்கள், கருத்துகள் மற்றும் ஆன்மிக கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன





## மாற்றம் விரைவில்...

ஜகத் குருவே சரணம்!

பொருள் தேடும் வாழ்வில் அதனோடு அருள் தேடும் நெஞ்சை அனைவருக்கும் அருள்வாய் குருவே! கடந்த காலங்கள் கனவாய் கரைந்திட எதிர்காலங்கள் புதிராய் தெரிந்திட நிகழ்காலம் மட்டும் நித்தியமாய் நம் இருப்பில். வினையின் விளைவுகள் நின் பொற்பாத கமலத்தில். தயை புரிவாய் அருள் புரிவாய் அனைவருக்கும் அனைத்தும் ஆனந்தமாக... பல்வேறு பரிமாணங்களில் குருராஜரின் புகழை உலகில் கடைக் கோடி பக்தனுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்கிற உயர்ந்த நோக்கில் தொடர்ந்து அன்பு நெஞ்சங்கள் பலரின் ஒத்துழைப்புடன் நம்முடைய இதழானது உங்கள் கண்களில் இப்பொழுது தவழ்ந்து கொண்டிருக்கிறது. மிக விரைவில் குருராஜரின் அருளுடனும் ஆசிகளுடனும் இந்த மின் இதழானது அச்சு ஊடகத்தின் மூலமாகவும் வெளிவர வேண்டும் என்ற ஒரு பெரும் முயற்சியில் நம்முடைய அமைப்பு ஈடுபட்டு இருக்கிறது.

இந்த இதழைப் படிக்கும் அன்பு நெஞ்சங்களாகிய நீங்கள், படிப்பதோடு மட்டுமில்லாமல் உங்களுக்குத் தெரிந்த ஆன்மிக ஆர்வமுள்ள அன்பு நெஞ்சங்களுக்கு இந்த இதழினை அனுப்புமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இதழில் பல்வேறு புதிய பகுதிகள் மிக விரைவில் இணைக்கப்பட்டு நம் இதழின் மேன்மை மேலும் அதிகரிக்கப்படும் என்பதை இத்தருணத்தில் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த குருசேவையில் தொடர்ந்து சேவையாற்றி வரும் நம் ஐடார்க் பப்ளிகேஷன் கமிட்டி நண்பர்களுக்கும், தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கும் அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றிணைவோம்! உரக்க சொல்வோம் உலகம் முழுக்க

ஓம் ஸ்ரீ ராகவேந்திராய நமஹ! ஜகத்குருவே சரணம்!

**DMAG சரவணன்,**

**செயலாளர், அகில உலக ராகவேந்திரர் பக்தி இயக்கம்.**





மந்திராலயம் ஸ்ரீ ராகவேந்திரர் பிருந்தாவனத்திற்கு வருகைபுரிந்த கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. பசவராஜ் பொம்மை, முன்னாள் முதலமைச்சர் திரு. பி.எஸ். எடியூரப்பா, அமைச்சர்கள் ஸ்ரீ கோவிந்த கர்ஜோல், ஸ்ரீ ஸ்ரீராமலு ஆகியோர் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளின் மூல பிருந்தாவனத்தை தரிசனம் செய்து, பீடாதிபதி ஸ்ரீ சுபுதேந்திர தீர்த்தரிடம் ஆசி பெற்றனர்.

அதைத் தொடர்ந்து துங்கபத்திரா நதிக்கரையில் குளியல் அறை கட்டடம் கட்டும் பணி மற்றும் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மடம், மந்திரலாயம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கான குடிநீர் விநியோக மேம்பாட்டுத் திட்டத்தை பீடாதிபதி ஸ்ரீ சுபுதேந்திர தீர்த்தர் முன்னிலையில் முதலமைச்சர் திரு.பசவவராஜ் பொம்மை, முன்னாள் முதலமைச்சர் திரு.பி.எஸ்.எடியூரப்பா ஆகியோர் ஆன்லைன் மூலம் துவக்கி வைத்தனர்.





மந்திராலய பீடாதிபதி ஸ்ரீ சுபுதேந்திர தீர்த்த சுவாமிகள், ஸ்ரீமன்ஞாயசுதா பாடத்தின் 7வது பேட்ஜ் வகுப்புகளை ஸ்ரீ ராகவேந்திரரின் மூலபிருந்தாவனம் அருகே துவக்கி வைத்தார். மகாமகா உபாத்யாயா ஸ்ரீ ஸ்ரீ ராஜா எஸ் கிரி ஆச்சார்யா உடன் இருந்தார்.

# புரந்தரதாஸர் சரித்திரம்



திரு.சத்சங்கம்
ஸ்ரீநிவாச தாஸர்
தலைவர், IDARC
தமிழ்நாடு

புரந்தர தாசரின் சரித்திரத்தை விளக்கிக் கூறும் தொடர்...

கலியுகத்தில் பாமர ஜனங்கள், லௌகீகத்தில் வெகுவாக ஈடுபட்டு, துக்கங்களை அனுபவித்து வருவதும், பகவத் ஸ்மரணை, ஆராதனை பக்தி வெகுவாக் குறைந்து வருவதையும் கண்டு, பரம கருணா மூர்த்தியான ஸ்ரீ ஹரி, நாரதரை அழைத்து, அவதாரம் செய்யும்படி சொல்லி, பாமர ஜனங்களை கடைத்தேற்றும்படி கட்டளையிட்டார். நாரதரும் இசைந்து அவ் வாறே செய்தார். நாரதருக்கும் கலியுகத்தில் பிறந்து ஸ்ரீமதாச்சாரியரின் சேவை செய்ய விருப்பமும் இருந்தது.



திருப்பதி வெங்கடரமண ஸ்வாமியைக் குலதெய்வமாகக் கொண்ட வரதப்ப நாயக்கருக்கு சுவாமியின் அருளால், ஓர் ஆண் குழந்தை கி.பி.1484ல் ஜனனமாயிற்று. பெற்றோர்கள், சிசுவுக்கு ஸ்ரீனிவாஸ நாயக் என நாமகரணம் செய்தார்கள். தன் குல தெய்வமான ஸ்ரீனிவாஸ மகாபிரபுவின் பேரில், தன் ஆழ்ந்த பக்தியைக் காட்டும் அநேக பாடல்கள், பிற்காலத்தில் ஸ்ரீ புரந்தரதாஸர் இயற்றியதிலிருந்து அவருடைய குலதேவதா உபாஸனை நன்கு புலனாகிறது.

வரதப்ப நாயக், தன் குமாரனுக்கு உற்ற வயதில் சௌளம், உபநயனம் முதலியன செய்வித்தார். கன்னட, ஸம்ஸ்க்ருத மொழிகளில் வித்யாப்யாஸமும் நடந்தது. வரதப்ப நாயக், தன் மகனுக்கு தங்கம், வைரம், நவரத்தின வியாபாரத்தில் உள்ள பல நுணுக்கங்களை சொல்லிக் கொடுத்தார். ஸ்ரீனிவாஸ நாயக்கிற்கு சங்கீதத்திலும் ஆர்வம் இருந்தது. எனவே சங்கீதமும் கற்றார்.



**புரந்தர தாஸர்**
(கி.பி. 1484 – 1564)

மேலும் தார்மீக வித்தை இல்லாமற் போகக் கூடாதென அவர் தகப்பனார் சில சாஸ்த்ரங்களையும் கற்றுக் கொடுத்தார்.

ஸ்ரீனிவாஸ நாயக் யௌவனப் பருவம் அடைந்தார். வயது 18 இருக்கும். சரஸ்வதிபாய் என்ற கன்னிகையுடன் விவாஹம் நடந்தேறியது. சரஸ்வதிபாயும் நல்ல செல்வச் செழிப்புடன் கூடியதாக இருந்த போதிலும், தான் அழகு மிக்கவள், ஐஸ்வர்யமுடையவள் என்ற கர்வம் இல்லை. பூததயை, தெய்வபக்தி இவைகளே ஆபரணங்கள் எனக் கருதியவள். ஸ்ரீனிவாஸ நாயக் நற்பண்புகள் உடையவராயிருந்தும், உதார குணம் (ஈகைகுணம்) மட்டும் கிடையாது. தெய்வ த்வேஷம். இல்லை. அதனால் மட்டும் தெய்வ பக்தி உண்டு எனக் கருதலாகாது. லோபம் (கருமித்தனம்) பிறவிக் குணமாயிருந்தது. யாசிப்பவரைக் கண்டால் விரோதியைப் பார்ப்பது போலத் தோன்றும். எவராவது தர்மோபதேசம் செய்தால் ஏளனமாக அவரிடம் ''உங்கள் போதனை பணத்திற்காக'' என்று சொல்வார்.

கருமித்தனம் மிக்கவரானபடியால், நாஸ்திகத்தின் விளம்பில் நின்றிருந்தவர் என்றால் மிகையில்லை. பெற்றோர்கள் காலாமாகி விட்ட போதிலும், இவரின் கருமித்தனம் மட்டும் சிரஞ்சீவத்வம் பெற்றிருந்தது. மனைவி சரஸ்வதிபாய், தன் கணவர் தினமும் அளந்து கொடுக்கும் பொருள்களைக் கொண்டே சமையல் முதலிய காரியங்கள் செய்ய வேண்டும். விலையுயர்ந்த முத்து, இரத்தினம் முதலிய வியாபாரத்தில் மட்டும் அவருக்கு நிகர் யாருமில்லை.

தொடரும்...



திருமதி விஜயா காமராஜ்

சென்னை.



## வருண பகவான் ஆசி பெற்ற ஸ்ரீ ராகவேந்திரர்

பிரம்ம லோகத்திலிருந்த சங்கு கர்ண தேவதை ஸ்ரீ ஹரியின் ஆசியுடன் பிரகலாதராய், ஸ்ரீ வியாசராஜராய், ஸ்ரீ ராகவேந்திரராய் அவதரித்தார். ஸ்ரீ ராகவேந்திரருக்கு ஸ்ரீ ஹரியின் ஆசி எப்போதும் உண்டு. அதேபோல் அவர் ஸ்ரீ மகாலட்சுமி தேவி, ஸ்ரீ சரஸ்வதி தேவி, ஸ்ரீ அம்பிகை தேவி ஆகிய முப்பெரும் தேவியரின் அருளாசி பெற்றவர் என்பதை ஏற்கனவே நாம் பார்த்தோம். ஸ்ரீ ராகவேந்திரர் பஞ்ச பூதங்களின் ஆசியைப் பெற்றவர் என்பதைப் பார்க்கலாம்.

**வருண பகவான்**

தஞ்சாவூருக்கும் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளுக்கும் என்றென்றும் முக்கிய தொடர்பு உண்டு. அவர் சன்னியாசம் ஏற்றதே தஞ்சையில்தான். 12 ஆண்டுகள் தவம் இருந்த இடம் தஞ்சைதான். அப்படிப்பட்ட தஞ்சையின் பஞ்சத்தைப் போக்க ஸ்ரீ ராகவேந்திரர் வருண பகவானின் துணையோடு நிகழ்த்திய மகிமையைப் பார்க்கலாம்....

கி.பி.1642ம் ஆண்டு விஜயராகவ நாயக் என்னும் அரசர் தஞ்சையை ஆண்டு வந்தார். இயற்கை சதி செய்ய எங்குப் பார்த்தாலும் பஞ்சம், பசி பட்டினி. நிலைமை கட்டுக்கடங்காமல் போனதும் தவித்த அரசர் கும்பகோணத்தில் இருந்த ஸ்ரீ ராகவேந்திரரை சரணடைந்து பிரார்த்தித்து மகானைத் தஞ்சாவூருக்கு எழுந்தருளும்படி வேண்டிக் கொண்டார்.

மக்களின் பசியை அந்த மகான் பொறுப்பாரா என்ன? உடனே தஞ்சை வரச் சம்மதம் தெரிவித் தார் ஸ்ரீகள். தஞ்சையை அடைந்தவுடன் ஸ்ரீ மடத்தி லிருந்து பெருமளவு தானியங்களை மக்களுக்கு வழங்கினார். பின்னர் அரசரின் தானிய கிடங்குகளில் பீஜாட்ஷர மந்திரத்தை எழுதி வைத்து தானியங்களை வேண்டிய அளவு அனைவருக்கும் வழங்கும்படி கட்டளையிட்டார்.



என்ன ஆச்சரியம். தானியங்கள் அள்ள அள்ளக் குறையாமல் அட்சய பாத்திரமாக வளர்ந்து கொண்டே வந்தன. மக்கள் பசியாறி மகிழ்ந்தனர். மக்க ளுக்கு நிரந்தர தீர்வு காண மழை வேண்டி யாகங்களைச் செய்வித்து வருண பகவானை வேண்டி பிரார்த்தனை செய்தார்.

ஸ்ரீ ராகவேந்திரர் ஸ்ரீ ஹரியின் ஆசி பெற்றவர் என்பது வருண பகவானுக்குத் தெரியாமல் போகுமா? அவர் வேண்டுதலுக்குச் செவி சாய்க்காமலா போய்விடுவார்.?

ஸ்ரீராகவேந்திரரின் பிரார்த்தனைக்கு உடனடியாக செவி சாய்த்தார் வருண பகவான்.

தஞ்சை மாநகரின் மேல் கரு மேகங்கள் சூழ்ந்து மழை பொழிந்து நீர்நிலைகள் நிரம்பின. தஞ்சை மண் மட்டும் குளிரவில்லை. தஞ்சை மக்களின் மனமும் குளிர்ந்தன. மழை வெள்ளத்தைக் கண்டு மக்கள் மனம் மகிழ்ச்சி வெள்ளத்தில் தத்தளித்தது. மக்கள் விவசாயம் செய்யத் தொடங்கினர். தானியங்களின் விளைச்சல் அமோகமாக இருந்தது. பஞ்சம் நீங்கியது மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்..

ஸ்ரீ ராகவேந்திரர் வருண பகவானின் பரிபூரண ஆசிபெற்றவர் என்பதைப் பார்த்தோம். அடுத்த இதழில் அக்னி பகவானின் பரிபூரண ஆசி பெற்றதைப் பார்க்கலாம்...

தொடரும்.....

தொப்பம்பட்டி அருள்மிகு கர்மயோகி

ஸ்ரீ ராகவேந்திரர் பிருந்தாவனம்

# மாதம் ஒரு பிருந்தாவனம்

**ம**ந்திராலயம் க்ஷேத்திரத்தில் உள்ள மூல பிருந்தாவனத்தில் ஜீவனோடு அமர்ந்து பக்தர்களுக்கு அருளாசி வழங்கி வரும் மகான் ஸ்ரீ ராகவேந்திரருக்கு பல இடங்களில் மிருத்திகை பிருந்தாவனங்களும், சிலா ரூப ஆலயங்களும் கட்டப்பட்டு சிறப்பான முறையில் பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இதில் சில பிருந்தாவனங்கள் ஸ்ரீ மடங்களின் சார்பாகவும், தனிப்பட்ட டிரஸ்ட் சார்பிலும் கட்டப்பட்டு மத்வாச்சார்யர்கள் மற்றும் சிறந்த ஆச்சாரியர்களால் பூஜைகள் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

ஆனால் குருராயருக்கு ஓர் ஆலயம் ஓர் பெண்ணின் முயற்ச்சியால் கட்டப்பட்டு அங்கு பெண்ணால் குருராயருக்கு சிறப்பாக பூஜை செய்யப்படுகிறது என்றால் அது குருராயரின் பரிபூரண ஆசியால் மட்டுமே சாத்தியமானது என்று சொல்ல வேண்டும்.

அந்த ஆலயம் தொப்பம்பட்டியில் அமைந்துள்ள கொங்கு மந்திராலயம் தான். அந்த ஆலயத்தை கட்ட குருராயரால் தேர்ந்தெடுக்கப் பட்டவர் பிரார்த்தனை நேரம் அன்னை கோபிகா செல்வி. சுமதி அவர்கள்.

அந்த ஆலயம் உருவான மகிமை நிகழ்வுகள் குறித்து செல்வி சுமதி அவர்கள் கூறியதை கேட்போம்.

‘‘சிறு வயது முதல் குருராயரின் மீது பற்று கொண்ட நான் பருவ வயதை கடந்த போது குருராயருக்கு கோயில் கட்ட வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஈரோடு பகுதியில் 3 ஆண்டுகள் தொடர்ந்து பல்வேறு இடங்களை பார்வையிட்டு சில இடங்களுக்கு முன்பணமும் கொடுத்தேன். ஆனால் அடுத்தக்கட்ட நகர்வுகள் எதுவும் நடைபெறாமல் பல தடைகள் வந்ததால் மனம் தளர்ந்தேன்.

மந்திராலயம் சென்று அவரை தரிசனம் செய்து விரைவில் கோயில் கட்ட சங்கல்பம் செய்து



கண்ணை மூடிக்கொண்டு கோயில் பணிகள் விரைவில் முடிய குருராயரை தியானித்துக் கொண்டு வந்தேன்

அப்போது திடீரென ஒரு குரல் அசிரீரியாக ஒலித்தது. ‘‘கொடுமுடி அருகே ஆற்றுப் பாலத்தின் கீழ் இருக்கும் அம்மனை தரிசித்தால் நல்ல வழிகாட்டுவார்’’ என்று கூறியது.

பிரம்மா, விஷ்ணு, சிவன் அமைந்துள்ள தளம் தான் கொடுமுடி என்பதை நான் அறிவேன். ஆகவே ஊருக்கு சென்றதும் என் நண்பர்களை



அழைத்துக் கொண்டு அந்த பகுதிக்கு சென்று தேடினோம். அப்போது அங்கு வந்த பெண் ஒருவர் நொய்யல் ஆற்று பகுதியில் உள்ள பாலம் அருகே அம்மன் சிலை இருப்பதாக கூறினார். அந்த இடத்திற்கு சென்றதும் அங்கு அம்பாள் சிலை மணல் மேடு பகுதியில் இருந்தது. நாங்கள் அந்த சிலைக்கு பூஜைகள் செய்தோம்.

இதே போல் இரண்டு மூன்று முறை சென்று அந்த அம்பாளுக்கு பூஜை செய்தோம்.

நான்காவது நாள் பூஜை செய்த போது, நான் கண்மூடி அம்மனை வேண்டிக் கொண்டிருந்தேன். அப்போது என் மனக் கண்ணில் ஓர் இடத்தின் வரைபடம் தெரிந்தது. மனை எண். 141, 142 கோயில் கட்ட சரியான இடம் என்றும் அந்த இடத்திற்கு போகும் வழியும் அசிரிரீ குரல் மூலம் கேட்டது.

நான் மனக்கண்ணில் கண்ட காட்சியின் படி ஒரு முள் காட்டுப் பகுதி வழியாகச் சென்று அந்த இடத்தை பார்த்தோம்.

பின்னர் ஆவணி மாதம் பௌர்ணமி தினத்தன்று அந்த இடத்தை தூய்மைப் படுத்தி குருராயரிடம் அனுமதிக் கேட்டு பூஜை செய்தோம். அப்போது அந்த பகுதிக்கு ஆடுகளை மேய்த்துக் கொண்டு ஒரு வயதான பெண் மஞ்சள் புடவை, புதிய மாங்கல்ய சரடு அணிந்து கொண்டு வந்திருந்தார். நாங்கள் அவரிடம் பூஜைக்கு படைத்த வெற்றிலை பாக்கு, கேசரி பிரசாதம் ஆகியவற்றை கொடுத்தோம்.

''என்ன செய்யப் போறீங்க'' என்று அவர் கேட்டார்.

''கோயில் கட்டப் போகிறோம்'' என்று கூறியதும், ''தாராளமாக கட்டுங்கள்'' என்று கூறிய அந்த பெண் கண் இமைக்கும் நேரத்தில் அங்கிருந்த மறைந்து விட்டார். எங்களால் இதை நம்ப முடியவில்லை.

உடனே சிறிது தூரத்தில் நின்று கொண்டிருந்த எங்கள் கார் டிரைவரிடம் அந்த பெண் குறித்து கேட்டோம்.

''நீங்கள் நிற்கும் இடத்தில் காவி உடை அணிந்த பெரியவர் ஒருவர் நிற்பதை பார்த்தேன். அந்த பெண்ணை பார்க்கவில்லையே'' என்றார். அவர் கூறிய தகவல் எங்களுக்கு மேலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

எங்கள் கண்ணுக்கு பெண்ணாக தெரிந்தவர், கார் டிரைவர் கண்ணுக்கு குரு ராயராக தெரிந்துள்ளார்.

அந்தப் பெண்மணி கண் இமைக்கும் நேரத்தில் எங்கள் கண்களில் இருந்து மறைந்தார்.

குருராயரின் ஆசி கிடைத்து விட்டது என்ற மகிழ்ச்சியில் கோயில் கட்டுவதற்கான பணியை துவங்கினோம். 2019ம் ஆண்டு அக்டோபர் 11–ந் தேதி பூமி பூஜை போட்டுக் கொண்டிருந்தோம். அப்போதும் அசிரிரீ குரலில் ''பிப்ரவரி 7–ந் தேதி கும்பாபிஷேகம்'' என்று கேட்டது.

3 மாதத்தில் எப்படி கோயில் கட்டுவது என்று நான் உள்பட என்னுடன் இருக்கும் அனைவரும் திகைத்தோம். ஆனால் எப்படி கோயில் கட்டினோம் என்றே தெரியாது. கோயில் கட்டும் பணி வேக வேகமாக நடைபெற்று வந்தது. கோயிலில் சுவாமி சிலைகள் எங்கு வைப்பது என்பது எல்லாம் அசிரிரீ குரலில் கேட்டதை வைத்தே அமைத்து கோயில் கட்டினோம்.
அசிரிரீ குரலில் சொன்னது போல் 2020ம் ஆண்டு பிப்ரவரி 7–ந் தேதி கும்பாபிஷேம் நடத்தப்பட்டது.

இது அனைத்தும் குருராயரின் அருளாசியால் நடத்தப்பட்டது என்பதே உண்மை'' என்று குருராயர் தன் வாழ்வில் நிகழ்த்திய மகிமையை கூறினார் செல்வி. சுமதி.

**பிருந்தாவனம் திறந்திருக்கும் நேரம்:**

(7.00 am - 9.00 pm)

வியாழக்கிழமை : 7.00 am - 7.00 pm

(வியாழன் மாலை : 6.30 to 7.00 மணி வரை பஜன், கூட்டுப் பிரார்த்தனை.)

ஞாயிறு காலை 7.00 மணி முதல் மாலை : 6.00 மணி வரை.

அனைத்து விழா காலங்களிலும் காலை: 8.00 மணி முதல் மாலை: 6.00 மணி வரை கோயில் திறந்திருக்கும்.

**கோயிலுக்கு செல்லும் வழி**

காலை : 6.00 மணிக்கும், மதியம் 1.00 மணிக்கும் - மாலை 6.00 மணிக்கும் கொடுமுடியில் இருந்து தொப்பம்பட்டி வருவதற்கு பேருந்து வசதி உள்ளது.

இந்த நேரத்தைத் தவற விடும் அன்பர்கள் 9940953381 என்ற செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டால் கோவிலுக்கு வருவதற்கு வண்டி ஏற்பாடுச் செய்து தரப்படும்.

## கொலு பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

குருராயர் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்.

நமது ஐடார்க் – டைம்ஸ் மாத இதழ் சார்பில் நவராத்திரி விழாவை முன்னிட்டு கொலு போட்டி நடத்தப்பட்டது. இந்த போட்டியில் குருராயரின் சொந்தங்கள் பலர் தங்கள் வீட்டுக் கொலுவின் புகைப்படங்களை ஆர்வமுடன் அனுப்பி வைத்தனர்.

அதில் சிறந்த மூன்று கொலுக்கள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகிறது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஐடார்க் – டைம்ஸ் சார்பில் வாழ்த்துக்களையும் மற்றும் போட்டியில் பங்கு பெற்ற அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



திருமதி கல்பனா முனிரத்தினம்
16/165, மாரியப்ப செட்டி தெரு,
பாலக்கோடு – 636 808.

**2 ம் பரிசு**



திருமதி வி. லட்சுமி,
க/பெ. எஸ். கணேசன்.
சாய் பிரதர்ஸ் இல்லம்,
11/1424, சின்ன பியாலு லேன்,
மேற்கு மெயின் ரோடு,
தஞ்சாவூர் – 613 009.

**1 ம் பரிசு**



திரு.எஸ். முரளி கிருஷ்ணன்,
நெ. 7/21, மரப்பாலம் ரோடு,
3 கருங்கல்பாளையம்,
ஈரோடு – 638003

**3 ம் பரிசு**




**சிறப்பு பரிசு**

கொங்கு மந்திராலயம்
அருள்மிகு கர்மயோகி ஸ்ரீ
ராகவேந்திரர் பிருந்தாவனம்.
தொப்பம்பட்டி.



அன்னை கோபிகா,
(செல்வி சுமதி)
ஈரோடு

**ஐடார்க் அமைப்புடன் கைகோர்த்து சமூக சேவையில் சிறப்பாக செயல்படும் கொங்கு மந்திராலயம்**



கரூர் மாவட்டம் கொடுமுடி – தென்னிலை செல்லும் வழியில் தொப்பம்பட்டி கிராமத்தில் உள்ள ''கொங்கு மந்திராலயம்' எனும் அருள்மிகு கர்மயோகி ஸ்ரீ ராகவேந்திரர் பிருந்தாவனம் அன்னை கோபிகா (செல்வி.சுமதி) அவர்களின் சீரிய முயற்சியால் அமைக்கப்பட்டு சிறப்பான முறையில் குருராயருக்கு பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது கொங்கு மந்திராலயம், குருராயர் சேவை மட்டுமல்லாமல் ஐடார்க் அமைப்புடன் இணைந்து சமூக சேவையையும் சிறப்பான முறையில் செய்து வருகிறது.

கொங்கு மந்திராலயம் அமைந்துள்ள பகுதி மிகவும் குக்கிராமம் ஆகும். இங்குள்ள மாணவர்களுக்கு கல்வி வசதி மிகவும் குறைவாக உள்ளது. எனவே அந்த மாணவர்களின் கல்விக்கு உதவிடும் வகையில் இலவச டியூசன் வசதி செய்யப்பட்டுள்ளது.



எல்கேஜி முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் இங்கு வந்து தினமும் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு ஓய்வு பெற்ற தமிழ் பண்டிட் திருமதி பாரதி அவர்கள் மற்றும் அவரின் மகள் பி.எட். பட்டதாரியான ராதா அவர்கள் மற்றும் ஆசிரியை காயத்திரி அவர் களுடன் இணைந்து அன்னை கோபிகா (செல்வி.சுமதி) அவர்களும் மாணவர்களுக்கு பாடம் கற்பித்து கல்வி சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.



மேலும், அப்பகுதியை சேர்ந்த ஏழை குழந்தைகளுக்கு கல்விக் கட்டணம், பாடப் புத்தகம் வாங்கிக் கொடுத்தல், இதர அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் பண்டிகை நாட்களில் புத்தாடை வாங்கிக் கொடுத்தல் போன்ற சேவைகள் செய்யப்படுகின்றன.

கொங்கு மந்திராலயத்தில் நூலகம் அமைக்கப்பட்டு அந்தப் பகுதி மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

இதே போல் கொங்கு மந்திராலயத்தை சுற்றியுள்ள நிலங்கள் முட்செடிகள் வளர்ந்து விவசாயத்திற்கு பயனற்று காடுகளாக கிடந்தன. தற்போது அந்த பகுதிகள் சீரமைக்கப்பட்டு பூச்செடிகள் வளர்க்கப்பட்டு, பிருந்தாவனத்திற்கு தேவையான பூக்கள் அங்கிருந்து எடுக்கப்பட்டு குருராயருக்கு அலங்கரிக்கப்படுகின்றன.



இது மட்டுமல்லாமல் தற்போது அழிவின் விளம்பில் உள்ள நாட்டுக் கறவை பசுக்களை மீட்கும் வகையில் இங்குள்ள கோசாலையில் நாட்டுக் கறவை பசுக்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

அதே போல் ஐடார்க் மற்றும் ஈரோட்டில் உள்ள இலஞ்சி என்ற அமைப்புடன் இணைந்து ''புணர் ஜென்மம்'' என்ற பெயரில் அனாதை பிரேதங்களை நல்லடக்கம் செய்து ஈமக்காரியம் செய்யப்படுகிறது.

## மலேசியா ஐடார்க் விரிவாக்கம்:

## புதிய தெற்கு மண்டல நிர்வாகிகள் நியமனம்

**அ**கில உலக ஸ்ரீ ராகவேந்திரர் பக்தி இயக்கத்தின் மலேசியா கிளை, அகில உலக தலைவர் திரு.முனியாண்டி சுப்பையா அவர்களின் வழிகாட்டுதல்படி மலேசியா ஐடார்க் தலைவர் திரு.குணசிங்கம் அவர்கள் தலைமையில் சிறப்பான முறையில் செயல்பட்டு ஜெகத் குரு ஸ்ரீ ராகவேந்திரரின் புகழைப் பரப்பும் சேவையில் சீறும் சிறப்புமாக செயல்பட்டு வருகிறது.

குருராயரின் புகழை மலேசியாவில் மேலும் பெரிய அளவில் கொண்டு சேர்க்கும் வகையில் மலேசியா ஐடார்க் கிளை விரிவாக்கம் செய்யப்படுகிறது.

மலேசியாவில் 13 மாநிலங்கள் உள்ளன. இவை இரண்டு மண்டலாக பிரிக்கப்பட்டு இரண்டு ஐடார்க் புதிய மண்டலங்கள் உருவாக்கப்படுகிறது. அதில் தற்போது தெற்கு மண்டலம் உருவாக்கப்பட்டு அதற்கான புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தென் மண்டலம், மலாக்கா, ஜோகூர் மற்றும் நெகிரி செம்பிலான் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. இனி வரும் காலங்களில் இந்த பகுதியில் நடைபெறும் குருராயர் வைபவங்கள் அனைத்தும் மலேசியா ஐடார்க் தென் மண்டலம் சார்பில் நடத்தப்படும்.

ஐடார்க் மலேசியா தென் மண்டல தலைவராக திரு.கிஷோர் அவர்கள் நியமிக்கப்பட்டார். துணை தலைவராக திரு.இளங்கோ, செயலாளராக திருமதி கோகிலம், துணைச் செயலாளராக திருமதி சரஸ்வதி, பொருளாளராக திருமதி தமிழரசி, கமிட்டி உறுப்பினர்களாக திரு.ஆனந்தன், திரு.உதயா, திரு.ரவி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய நிர்வாகிகள் கூட்டம் அக்டோபர் 7–ந் தேதி நடைபெற்றது. இதில் ஐடார்க் மலேசியா தலைவர் திரு.குணசிங்கம் அவர்கள் கலந்துக் கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு ஐடார்க் சட்டத்திட்டங்கள், ஐடார்க் செயல்பாடுகள் மற்றும் குருசேவையின் மகத்துவத்தை எடுத்துக் கூறினார்.









மலேசியா ஐடார்க் தென் மண்டலம் சார்பில் அன்பு இல்ல குழந்தைகளுக்கு பண்டிகை காலப் புத்தாடை வழங்கப்படுகிறது.

அகில உலக ஸ்ரீ ராகவேந்திரர் பக்தி இயக்கத்தின் தலைவர் திரு.முனியாண்டி சுப்பையா அவர்களின் வழிகாட்டுதல்படி, மலேசியா ஐடார்க் தலைவர் திரு. குணசிங்கம் அவர்கள் தலைமையில் செயல்படும் மலேசியா ஐடார்க் குருராயர் சேவையில் மட்டு மல்லாமல் சமூக சேவையில் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக தற்போது மலேசியாவில் புதிதாக தென் மண்டல ஐடார்க் கிளை விரிவாக்கம் செய்யப்பட்டு புதிய நிர்வாகிகள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

தற்போது பண்டிகை காலத்தையொட்டி மலேசியா ஐடார்க் தென் மண்டல தலைவர் திரு.கிஷோர் அவர்களின் அறிவுரையின்படி செயலா ளர் திருமதி கோகிலம், பொருளாளர் திருமதி தமிழரசி மற்றும் இளைஞர் அமைப்பு தலைவர் திரு.உதயா அவர்கள் கூலாய் ஜோகூர் ஸ்ரீ ராகவேந்த்திரர் அன்பு இல்லத்தில் உள்ள 42 குழந்தைகளுக்கும் புத்தாடைகள் வாங்க உதவிக்கரம் நீட்டியுள்ளனர்.

வழக்கமாக ஏழை சிறுவர்களுக்கு புத்தாடை வழங்கும் அன்பு நெஞ்சங்கள் தாங்கள் வாங்கி செல்லும் ஆடைகளை அந்த குழந்தைகளுக்கு வழங்குவது வழக்கம். ஆனால் மலேசியா ஐடார்க் தென் மண்டல நிர்வாகிகள் இதில் சிறப்பான ஒரு முடிவு எடுத்து அங்குள்ள ஜெபி ஏயோன் ஷாப்பிங் மாலுக்கு அனைத்துக் குழந்தைகளையும் அழைத்துச் சென்று அங்கு அந்த குழந்தைகளையே அவர்களுக்கு தேவையான ஆடைகளை தேர்வு செய்யச் சொல்லி, அந்த ஆடைகளை வாங்கிக் கொடுத்ததே ஐடார்க்கின் சிறப்பான சேவையாகி உள்ளது.

மலேசியா ஐடார்க் தென் மண்டல கிளையின் சமூக சேவைக்கு ஐடார்க் மலேசியா மட்டுமல்லாமல் ஐடார்க் தமிழகம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.





# ராயக்கோர் கவிமாலை



திருமதி அனுராதா சந்திரமௌலி
சென்னை.

## குரு “வாரத்துதி”

## கடவுள் வாழ்த்து


கும்பேஸ்வரனுறை மங்களாம்பிகை சுதனே!
கும்பிட்டுத் தொழுவோர்க்கு நம்பிகையாகுபவனே!
வேழ முகம் கொண்டு நான்கு யுகம் வந்தவனே!
கணங்களைக் காப்பவனே... கணநேரத்தில் வருபவனே...
கணேசனே கண நாயகனே
வக்ரதுண்டனே விக்னராஜனே.. ..
வினைநீக்கிடும் விநாயகனுமைப் போற்றியே
"குரு வாரத் துதி" உரைத்திடவே தருவாய் நல்லாசியும்
நற்கதியுமே!!
உரைத்திடவே தருவாய் நல்லாசியும் நற்கதியுமே!!

1



பூர்ணப்பிரக்ஞரானவரை பூரணத்துவம் நிறைந்தவரை மத்வ
மத சாகரத்தை
த்வைத சித்தாந்தனை
பூஜிக்கத் தகுந்தவரை முக்யப்ராண வடிவினரை மும்மலங்கள்
களைந்தவரை
முந்தியேப் பணிந்திடுவோம்!!

2



வைகுண்டம் தனை விடுத்த ராஜாதி ராஜனவனை
தர்ம(ம்) உருக்கொண்ட ராமசந்த்ரமூர்த்தியவனை
முக்யப்ராணர் இதயத்திலே வீற்றிருக்கும் கோமகனை
சீதையோடு மங்கலங்கள் அள்ளித் தந்து காப்பவனை
ராம என்று கூறிடவே பாவம் போக்கும் பரம்பொருளை
இராகவேந்திர பக்தப் ப்ரிய மூலராமசந்திரனை முன் நின்று
வணங்கி பின்னே "குரு வாரத் துதி" உரைக்க மூலமான் அவன்
அருளால் எண்ணம் யாவும் சித்திக்கவே!

3



தொடரும்...

# குருராஜரின் மகிமை

## நோய் தீர்க்கும் மருத்துவர் குரு ராகவேந்திரர்

திரு.சாய்நாத்,
ஐதராபாத்

**ஸ்ரீ ஸ்ரீ** ராகவேந்திர ஸ்வாமிகள் பக்தர்களுடைய வாழ்க்கையிலே நிகழ்த்திய, நிகழ்த்திக் கொண்டிருக் கின்ற, நிகழ்த்தப் போகின்ற மகிமைகளோ ஏராளம் தாராளம். எத்தனை எத்தனை மகிமைகள் அவற்றையெல்லாம் சொல்லுவதற்கும் எழுதுவதற்கும் தமிழில் வார்த்தைகள்தனை தேடத்தான் வேண்டி இருக்கும். இது சத்தியமான உண்மை.

ராயரின் அதி தீவிர பக்தர் ஐதராபாத்தை சேர்ந்த திரு.சாய்நாத். அவர் தன் நண்பரின் வாழ்வில் குருராயர் நிகழ்த்திய மகிமையை கூறுகிறார்.

நான் என்னை சந்திக்கும் நபர்களிடத்தில் எல்லாம் குருராஜரின் அருமை பெருமைகளைச் சொல்பவன் ''ஓம் ஸ்ரீ ராகவேந்த்ராய நம" என்று சொல்லிக்கொண்டே இருங்கள் அது உங்கள் வாழ்வில் ஏற்படும் அனைதது பிரச்சினைகளையும் போக்கிவிடும் என்று சொல்வேன்.

ஒரு ரயில் பயணத்தின் போது என்னை ஒருவர் சந்தித்திருக்கிறார். சோரியாஸிஸ் நோயால் தான் அவதிப்பட்டு வருவதாகவும், என்ன மருந்து சாப் பிட்டும் அதன் தீவிரம் குறையவில்லை. உடலெல்லாம் அது படர்ந்து, நாளுக்கு நாள் அது தரும் வேதனை அதிகமாகிக்கொண்டே போகிறது. வாழ்க்கையே வெறுத்து போய்விட்டது, தற்கொலை செய்து கொள்ள லாம் என்கிற எண்ணம் வலுத்துக்கொண்டே இருக்கிறது என்று தன் வேதனையை சொன்னார்.

மந்த்ராலயம் என்றொரு இடம் இருக்கிறது, அங்கு மகான் ஸ்ரீ ராகவேந்திரர் இருக்கிறார். அவர் பார்வை பட்டால் பல ஜென்மங்களில் நாம் செய்த பாவங்களே கரைந்து போகிறது. அப்படியிருக்கையில் இந்த நோய் தீராமல் போகுமா?.

ஒரு முறை அந்த புனிதமான மந்த்ராலயத்திற்கு சென்று குருராஜரை தரிசித்துவிட்டு வாருங்கள். அவர் முன் நின்று உங்கள் பிரச்சினைகளை வாய் விட்டு சொல்லுங்க. இந்த நோய் தரும் வேதனையை சொல் லுங்க. நீங்கள் காப்பாற்றவில்லையென்றால், தற்கொ லையை தவிர வேறு வழியில்லை என்று உங்களுக்குத் தோன்றிய எண்ணத்தை அவர்கிட்ட சொல்லுங்க. என்னை காப்பாத்துங்க என்று மனதார அவரிடம் மண்டியிட்டு வேண்டுங்கள்.

''ஓம் ஸ்ரீ ராகவேந்த்ராய நம" என்று உரக்க சொல்லுங்க. உங்க கோரிக்கை அவரது செவிகளில் விழும். உங்கள் நோயை அவர் தீர்ப்பார். ஒரு வேளை அதன் பிறகும் உங்கள் நோய் தீரவில்லை என்றால் தாராளமாக நீங்க ஒரு முடிவெடுக்கலாம்" என்று சொன்னேன்.

நான் சொன்னபடியே அந்த நோய்வாய்ப்பட்ட நபர் மந்த்ராலயம் சென்றிருக்கிறார். குருராஜர் முன் தனக்கு வந்த நோய் குறித்தும் அது தரும் வேதனையையும் கூறி, அந்த நோய் தரும் வேதனை யில் இருந்து தன்னைக் காப்பாற்ற வேண்டியிருக்கி றார். தரிசனம் முடித்து மந்த் ராலய மடாதியாக அப்போது இருந்த ஸ்ரீ ஸ்ரீ சுஷ்மிந்திர தீர்த்த சுவாமிகளை சந்தித்து ஆசி பெற்றிருக்கிறார். தினமும் குறைந்தது 11 முறையாவது ''ஓம் ஸ்ரீ ராகவேந்த்ராய நம" என்று சொல்லி வாருங்கள் என்று சொல்லி மந்திராட்சதை கொடுத்து ஆசீர்வாதம் செய்து அனுப்பியுள்ளார் சுவாமிஜி.



உடனே அந்த நபர் தினம் தினம் ''ஓம் ஸ்ரீ ராகவேந்த்ராய நம" மந்திரத்தை உச்சரிக்க தொடங் கினார். வெகு விரைவிலேயே குருராஜரின் கருணையால் அவருக்கு அந்த நோய் மறைந்து போனது. நோய் தீர்ந்தாலும் இன்று வரை அவர் நாவில் ஒலித்துக் கொண்டிருக்கிறது அந்த அரிய மந்திரம். வாழ்க்கையை முடித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இருந்தவர் இன்று பலரின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் இருக்கிறார். மந்த்ராலய திசை நோக்கி, மகானின் இருப்பிடம் நோக்கி, அவர் அருளை பெற மற்றவர்களை பயணிக்க வைக்கும் வழிகாட்டியாய் இருந்து வருகிறார்

மகிமைகள் தொடரும்...